
06.01.16

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை: 5,000 டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்கிறது மத்திய அரசு



பருப்பு வகைகளின் விலை தொடர்ந்து அதிகரிக்காமல் இருக்கும் வகையில் அடுத்த மாதம் வெளிச்சந்தையில் விநியோகம் செய்யும் திட்டத்துடன் 5,000 டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கானஒப்பந்தப்புள்ளியை மத்திய அரசு நிறுவனமான எம்எம்டிசி வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அரசு வட்டாரத் தகவல்கள் கூறியதாவது: 2015ஆம் ஆண்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி குறைவாக இருந்ததால், பருப்பு வகைகளின் விலை பலமடங்கு அதிகரித்தது. இதை குறைப்பதற்கு, பருப்பு பதுக்கல்காரர்களின் கிடங்குகளில் சோதனையும், வெளிநாடுகளில்

இருந்து பருப்பு வகைகள் இறக்குமதியும் செய்யப்பட்டன. இருப்பினும், துவரம் பருப்பு விலை கிலோவுக்கு தற்போது ரூ.180ஆக உள்ளது. இந்நிலையில், பருப்பு உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததால், 2016ஆம் ஆண்டிலும் பருப்பு வகைகளின் விலை அதிகரிக்கக்கூடும் என்று மத்திய அரசு கருதுகிறது. இதையடுத்து, அடுத்த மாதம் உள்நாட்டு சந்தையில் துவரம் பருப்பை விநியோகத்தில் விடும் திட்டத்துடன் 5,000 டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளியை மத்திய அரசு நிறுவனமான எம்எம்டிசி வெளியிட்டுள்ளது. இதன்படி, மியான்மர், மலாவி, மொசாம்பிக் உள்ளிட்ட நாடுகளிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. எம்எம்டிசி நிறுவன அதிகாரிகள் தரப்பு கூறுகையில், "குறைந்தப்பட்சம் 2,000 டன் துவரம் பருப்பு என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டுள்ளது. அதையடுத்து இறக்குமதி செய்யப்படும் பருப்பு வகைகள், மும்பையில் உள்ள ஜவாஹர்லால் நேரு துறைமுகத்துக்கு பிப்ரவரி மாதம் 7ஆம் தேதியும், சென்னை துறைமுகத்துக்கு மார்ச் மாதம் 15ஆம் தேதியும் வந்தடையும்' என்றனர். எம்எம்டிசி நிறுவனம் கடந்த ஆண்டில் 5,000 டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்தது. ஆனால், உளுந்தம் பருப்பு தொடர்பாக அந்நிறுவனம் விடுத்த ஒப்பந்தப்புள்ளிக்கு போதிய வரவேற்பில்லை. மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் அண்மையில் செய்தியாளர்களிடம் பேசியபோது, பருப்பு வகைகளின் விலை வருங்காலத்தில் அதிகரிக்காமல் தடுக்கும் வகையில் வெளிநாடுகளில் இருந்து அதிக அளவுக்கு பருப்புகளை இறக்குமதி செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளும்படி எம்எம்டிசி உள்ளிட்ட நிறுவனங்களை வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு நிதியாண்டில் விதை நெல் உற்பத்தி இலக்கில், இதுவரை 177 மெட்ரிக் டன் உறுதி செய்யப்பட்டுள்ளது என வேளாண்மைத்துறை துணை இயக்குநர் தங்கசாமி தெரிவித்தார்.

**177 மெட்ரிக் டன் விதை நெல் உற்பத்தி**

திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி நடைபெறுகிறது. இதில், 33 சதவீத பரப்பளவுக்குத் தேவையான விதைகளை தனியார் மூலம் உற்பத்தி செய்து, வேளாண்மைத்துறை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. 2015-16 ஆம் ஆண்டில் 330 மெட்ரிக் டன் விதை நெல் உற்பத்தி செய்வதற்கு செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) தங்கசாமி தெரிவித்ததாவது:

திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு விதைப் பண்ணைகள் இல்லை என்பதால், பழனி, தொப்பம்பட்டி, ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலகுண்டு பகுதிகளில், தனி நபர்கள் மூலம் 84 ஹெக்டேரில் விதை நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோ 51, கோ 50, ஆடுதுறை 49, திருச்சி 3, நெல்லூர் 34449 ஆகிய ரகங்கள், 70 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில், திருச்சி 3, கோ 51 ரகங்கள் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

177 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மார்ச் இறுதிக்குள் மீதமுள்ள 153 மெட்ரிக் டன் விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு இலக்கு பூர்த்தி செய்யப்படும். இதேபோல், தரமான உளுந்து, தட்டைப் பயறு, பாசிப்பயறு, துவரை, பருத்தி, நிலக்கடலை ஆகியவற்றுக்கான விதைப் பண்ணைகள் அமைப்பதற்கு, அந்தந்த வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை விவசாயிகள் அணுகலாம் என்றார்.

**நெற்பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்**

சிவகாசி வட்டார வேளாண்மைத் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற இம்முகாமுக்கு சிவகாசி வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கோ.பத்மாவதி தலைமை வகித்தார். நெற்பயிரை தாக்கும் பூச்சிகள், பூச்சிக்கொல்லி மருந்துகளை கையாளும் முறைகள் குறித்து பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் சசிகுமார் படவிளக்கத்துடன் பயிற்சி அளித்தார்.நெற்பயிரை தாக்கும் நோய்கள், பயிர் மேலாண்மை குறித்து பயிர் நோயியல் துறைப் பேராசிரியர் விமலா பயிற்சி அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேற்பார்வையாளர் லதா நன்றி கூறினார். ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப உதவி மேற்பார்வையாளர் சதீஸ்குமார் செய்திருந்தார்.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் ஜனவரி 8-இல் உழவர் தின விழா**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2016-ஆம் ஆண்டுக்கான உழவர் தின விழா வரும் ஜனவரி 8-ஆம் தேதி நடைபெறுகிறது.

வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் உழவர் தின விழா, கருத்துக் காட்சி ஆகியவை நடத்தப்படுகின்றன. 2016-ஆம் ஆண்டுக்கான உழவர் தின விழா பட்டமளிப்பு விழா

அரங்கில் வெள்ளிக்கிழமை (ஜனவரி 8) நடைபெறுகிறது.

இதன் ஒரு பகுதியாக சுமார் 60 அரங்குகள் கொண்ட கண்காட்சி நடைபெறுகிறது. இதில், வேளாண் பல்கலை.யில் புதிதாக

கண்டுபிடிக்கப்பட்ட தோட்டக்கலை, வேளாண் சார்ந்த பயிர் ரகங்கள், வேளாண் கருவிகள், நவீன இயந்திரங்கள், இதர தொழில்நுட்பங்கள் ஆகியவை விவசாயிகள் பார்வைக்கு வைக்கப்படும்.

அத்துடன், வேளாண் தொழில் முனைவோர், முன்னோடி விவசாயிகளின் கண்டுபிடிப்புகள், தனியார் நிறுவனத்தின் தயாரிப்புகள் உள்ளடங்கிய நவீன கண்டுபிடிப்புகளும் இடம்பெறும். அதேபோல், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை சார்ந்த அரசுத் துறைகளின் பல்வேறு விதமான திட்டங்கள், அதன் பயன்கள், பயனாளிகளின் விவரங்களும் இடம் பெறுகின்றன.

உழவர் தின விழாவின்போது, விவசாயிகளின் சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் தேர்வு செய்யப்பட்ட 5 விவசாயிகளுக்கு வேளாண் விருது வழங்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் தமிழகம் முழுவதிலும் உள்ள ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள் சார்பில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொள்கின்றனர் என பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார்.

**நன்மை செய்யும் பூச்சிகள் வளர்ப்பு குறித்த பயிற்சி**

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நன்மை செய்யும் பூச்சிகள் வளர்ப்பு குறித்த பயிற்சி பிப்ரவரி 11-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து பல்கலைக்கழக பூச்சியியல் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பயிர்களில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் காரணிகளில் பூச்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மையத்தில் உயிரியல் முறை சார்ந்த பூச்சி கட்டுப்பாட்டுக்கு உதவும் ஒட்டுண்ணிகள், இரை விழுங்கிகள், பூச்சிகளை அழிக்கவல்ல பாக்டீரியாக்கள், நச்சுயிரிகள் பற்றிய தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில், பயிர் சாகுபடி செய்யும் உழவர்கள், பண்ணை மகளிர், வீட்டுத் தோட்ட காய்கறி சாகுபடியாளர்கள் குறிப்பாக பெண்கள், தொழில் முனைவோர், இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம். இந்த பயிற்சி பிப்ரவரி 11-ஆம் தேதி காலை 9 மணியளவில் பூச்சியியல் துறை வளாகத்தில் நடைபெறுகிறது. இதில் பங்குபெற விரும்புவோர் 0422-6611414, 6611214 என்ற தொலைப்பேசி எண்களிலோ, வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மையம், பூச்சியியல் துறையை நேரிலோ அணுகலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அந்தியூரில் ரூ. 4 லட்சத்துக்கு வாழைத் தார் ஏலம்**

அந்தியூர் புதுப்பாளையத்தில் உள்ள பவானி வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் உற்பத்தி சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாழைத் தார் ஏலத்தில் ரூ. 4 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

இங்கு விற்பனைக்காக அந்தியூர் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 5 ஆயிரம் வாழைத் தார்களைக் கொண்டு வந்திருந்தனர். இதில், பூவன் தார் ஒன்று ரூ. 25 முதல் ரூ. 275 வரையிலும், பச்சநாடன் தார் ஒன்றுக்கு ரூ. 35 முதல் ரூ. 165 வரையிலும், செவ்வாழை தார் ரூ. 165 முதல் ரூ. 475 வரையிலும், நேந்திரன் கிலோ ரூ. 12.40 முதல் ரூ. 23.10 வரையும் ஏலம் போனது.

மேலும், தேன்வாழை தார் ரூ. 75 முதல் ரூ. 340 வரையிலும், மொந்தன் ரகம் தார் ரூ. 65 முதல் ரூ. 265 வரையிலும், ரொபஸ்டா தார் ரூ. 55 முதல் ரூ. 190 வரையிலும், ரஸ்தாளி ரூ. 90 முதல் ரூ. 425 வரையிலும், கதளி

கிலோ ரூ. 7.10 முதல் ரூ. 20.10 வரையியும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 4 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**எண்ணெய் வித்துகள் உற்பத்தியை அதிகரிக்க பயிற்சி**

கோபியை அடுத்த மலையப்பாளையத்தில் எண்ணெய் வித்துகள் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு செவ்வாய்க்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

நம்பியூர் வட்டார வேளாண்மைத் துறையின் சார்பில் மலையப்பாளையம் கிராமத்தில் எண்ணெய் வித்துகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நவீனத் தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஒழலக்கோயில் ஊராட்சித் தலைவர் சக்திரத்தினம் தலைமை வகித்து பயிற்சியைத் தொடக்கி வைத்தார்.

நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி எண்ணெய் வித்துப் பயிர்களில் அதிக மகசூல் பெறுவதற்கான புதிய உத்திகள் குறித்து உரையாற்றி, விவசாயிகளின் கேள்விகளுக்கு விளக்கமளித்தார். வேளாண்மை அலுவலர் பிரியா, வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்தும், சொட்டுநீர் பாசனம் அமைப்பது குறித்தும் உரையாற்றினார்.

மலையப்பாளையம், சின்னசெட்டிபாளையம், பெரியசெட்டிபாளையம், மலையப்பாளையம்புதூர், குப்பிபாளையம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர். வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் அருணாச்சலம் நன்றி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் செந்தில்முருகன், உதவி தொழில்நுட்ப மேலாளர் மணிகண்டன், அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

**அட்மா திட்டத்தில் நெல் பண்ணைப் பள்ளி**

நாமகிரிப்பேட்டை வட்டாரம், பெரியகோம்பை கிராமத்தில் உள்ள பெரப்பன்சோலையில் நெல் பண்ணைப் பள்ளி பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் ஆகியன குறித்து விவசாயிகளுக்கு வயல்வெளியில் பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் இரு அணிகளாகப் பிரிந்து நெல் வயலில் காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் ஆகியவற்றை நேரடியாகக் கண்டு தெளிவு பெற்றனர். அதனடிப்படையில் அப்பயிர்களுக்கு பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தல் குறித்தும் முடிவு செய்யப்பட்டது.

நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ராஜேந்திரன் கலந்து கொண்டு பயிற்சியை நடத்தினார். பகுதி வேளாண்மை உதவி அலுவலர், பெ.ராமமூர்த்தி விவசாயிகளை வழி நடத்தினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்திரசேகரன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளரகள் நந்தினி, விக்னேஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர். இப்பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நாமகிரிப்பேட்டை கூட்டுறவு விற்பனை நிலையத்தில் ரூ.50 லட்சம் மஞ்சள் ஏலம்**

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில் ரூ.50 லட்சம் மஞ்சள் ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. செவ்வாய்க்கிழமை நடந்த ஏலத்தில் விரலி ரகம் 560 மூட்டை, உருண்டை ரகம் 215 மூட்டை, பனங்காளி ரகம் 15 மூட்டை என மொத்தம் 790 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில், ஒரு குவிண்டால் விரலி ரூ.9 ஆயிரத்து 589 முதல் ரூ.11 ஆயிரத்து 885 வரையும், உருண்டை ரகம் ரூ.8 ஆயிரத்து 999 முதல் ரூ.10 ஆயிரத்து 079 வரையும், பனங்காளி ரகம் ரூ.8 ஆயிரத்து 172 முதல் ரூ.19 ஆயிரத்து 999 வரை ஏலம் போனது. இதில், மொத்தம் விற்பனைக்கு வந்த 790 மஞ்சள் மூட்டைகள், ரூ.50 லட்சத்துக்கு ஏலம் போனது.

**தீவனத்தில் தேவையான அளவு எரிசக்தி சேர்க்க அறிவுறுத்தல்**

தீவனத்தில் தேவையான அளவு எரிசக்தி சேர்க்க வேண்டும் என, கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: அடுத்த மூன்று நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடனும் மழையற்றும் காணப்படும். இரவில் வெப்பம் குறைந்தும், பகலில் வெப்பம் அதிகமாகவும் இருக்கும். இத்தகைய உயர்வும், தாழ்வும் கலந்த வானிலையில் கோழிகளுக்கு லேசான அயற்சி காணப்படும். இதனால், கோழிகளுக்கான தீவனம், அதன் சுற்றுப்புறச் சூழ்நிலை, தண்ணீர் ஆகியவை தரமானதாக இருக்க வேண்டியது அவசியம். மேலும், தீவனத்தில் எரிக்தியின் அளவு, தீவன எடுப்பை முடிவு செய்யும் காரணியாக இருப்பதால், தீவனத்தில் தேவையான அளவுக்கு எரிசக்தி இருப்பது அவசியம். குறைவாக இருப்பின் கோழிகள் அதிக அளவு தீவனம் உள்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"கால்நடைகளை வாகனங்களில் கொண்டு செல்ல அனுமதி அவசியம்'**

கால்நடைகளை வாகனங்களை கொண்டு செல்ல உரிய அனுமதி பெற வேண்டும் என்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

கால்நடை போக்குவரத்து விதிகள் 2001-ன் விதி-96ன் படி சான்றிதழ் பெறப்பட வேண்டும். மேற்படி சான்றிதழானது, உதவி ஆணையர் இய க்குநர், துணை இயக்குநர் அல்லது முதன்மை கால்நடை அலுவலர் ஆகி யோரின் அதிகார வரம்புக்குள் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை அலுவலரிடம் பெறப்பட வேண்டும். சான்றிதழ் பெறுவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

கொண்டு செல்லப்படும் கால்நடைகள் பரவக் கூடிய நோய்கள் ஏதும் இ ல்லாமல் ஆரோக்கியத்துடன் போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் இருக்க வேண்டும்.

புதிதாக பிறந்த கால்நடைகள் காயமடைந்தவை, நோய் வாய்ப்பட்டவை, கண் பார்வையற்றவை, உடல் மெலிந்து சோர்வான கால்நடைகள், உடல் ஊனமுற்ற கால்நடைகள், கன்று குட்டிகள் அல்லது குட்டிகள் ஈன்று 72 மணி நேரம் ஆகாத கால்நடைகள் மற்றும் கன்றுகள் அல்லது குட்டிகள் ஈனும் நிலையிலுள்ள கால்நடைகள் ஆகியவை போக்குவரத்துக்கு ஏற்ற வையல்ல.

சினையாக உள்ள கால்நடைகள் மற்றும் இளம்குட்டிகள் ஆகியவற்றை, இதர கால்நடைகளுடன் எடுத்துச் செல்லக் கூடாது. கால்நடைகளுக்கு தேவையான உணவு, தீவனம், தண்ணீர் மற்றும் பால் கொடுக்கும் வசதி ஆகிய விவரங்களை சான்றிதழ் பெறும் முன்பு அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

போக்குவரத்து மேற்கொள்ளும் வாகனத்தில் ஒவ்வொரு கால்நடைக்கும் இடையேயான இடைவெளி 2 சதுர மீட்டர் இடைவெளிக்கு குறைவாக இருக்கக் கூடாது. மஞ்சள் நிறப்பலகையில் கால்நடைகளை ஏற்றிச்செ

ல்லும் வாகனம் என்ற வாசகம் கருப்பு நிற எழுத்துகளில் வாகனத்தின் முன்புறம் மற்றும் பின்புறம் பார்வைக்கு தெளிவாக எழுதப்பட வேண்டும்.

மேற்காணும் விதிமுறைகளை கடைபிடிக்காமல் கால்நடைகளை போக்குவரத்து செய்தால் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனம் மற்றும் அனைத்து கால்நடைகளும் பறிமுதல் செய்யப்பட்டு,கால்நடைகள் கொண்டு செல்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு இயந்திர நெல்நடவுப் பயிற்சி**

பொன்னமராவதி அருகே உள்ள நகரப்பட்டியில் பண்ணைப்பள்ளி விவசாயிகளுக்கு இயந்திர நெல்நடவு குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

2015 ஆம் நிதியாண்டில் அட்மா திட்ட உதவியுடன் பொன்னமராவதி அருகே உள்ள கண்டியாநத்தம் கிராமத்தில் டிச. மாதம் முதல் ஒவ்வொரு வாரமும் பயிர் மேலாண்மை குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, தற்போது விவசாயிகளுக்கு இயந்திர நடவு செய்வதன் பயன்கள் குறித்த செயல்விளக்கப் பயிற்சி நகரப்பட்டியில் விவசாயி செல்வராஜ் என்பவரது வயலில் செய்து காண்பிக்கப்பட்டது.

பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் இயந்திர நடவின் பயன் குறித்துப் பேசினார். பாய் நாற்றங்கால் அமைக்கும் முறைகள் பற்றி உதவி வேளாண்மை அலுவலர் குமாரசாமியும், பவர் கோனோவீடர் மூலம் களை எடுக்கும் விதம் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி ஆகியோர் பயிற்சியளித்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் அருளானந்தம் மற்றும் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பிரியங்கா மற்றும் ராஜþ ஆகியோர் செய்திருந்தனர்.

**ஜன. 8இல் மீனவர் குறைதீர் கூட்டம்**

தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கான குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜன. 8) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கான, ஜனவரி மாதத்துக்கான குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள முத்து அரங்கத்தில் ஜனவரி 8 ஆம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் பதிவு செய்த சமூக ஆர்வலர்கள், ஊர்த் தலைவர்கள், பெரியவர்கள் அவர்கள் பதிவு செய்து கொண்ட பொருள் குறித்து பேச வாய்ப்பு வழங்கப்படும்.

மேலும், அந்தப் பொருள் மீதான கருத்துக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அங்கேயே பெறப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதால் இந்தக் கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"தென்னையில் குரும்பல்கள் உதிர்வதை தடுக்க வேர்களில் டானிக் செலுத்தலாம்'**

தென்னை மரங்களில் குரும்பல்கள் உதிர்வதைத் தடுக்க தென்னை டானிக்குகளை விவசாயிகள் பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியின் பேராசிரியர் சி.ராஜாபாபு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தென்னை மரங்கள் நன்றாக காய்க்கவும், திரட்சியான காய்கள் கிடைக்கவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தென்னை மரங்களுக்கு ஆண்டுக்கு இருமுறை மக்கிய எருவுடன் சரியான அளவு தழைமணிச் சாம்பல் சத்துக்களை இட

வேண்டும். யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 2 கிலோ ஆகிய உரங்களை இரு சமப்பாகங்களாகப் பிரித்து தென்னை மரத்தின் அடியில் இருந்து 1.8 மீட்டர் தொலைவில் அரைவட்ட பாத்திகளில் இட வேண்டும்.மேலும், உரம் இடும்போது அவை நன்கு மண்ணில் கலக்க போதுமான அளவு ஈரப்பதம் இருக்குமாறு நீரைப் பாய்ச்ச வேண்டும். ஆண்டுக்கு இருமுறை தென்னை டானிக் 200 மில்லியை மரத்தில் இருந்து இரண்டு அடி தள்ளி உறிஞ்சும் வேர்களைத் தேர்வு செய்து டானிக் செலுத்துவதன் மூலம் குரும்பல் உதிர்வதைக் கட்டுப்படுத்தலாம். தென்னை டானிக் தேவையானவர்கள் கிள்ளிகுளம் வேளாண் கல்லூரிக்குள்பட்ட பாளையங்கோட்டை வேளாண் உதவி மையத்தை நேரிலோ அல்லது 0462-2575552 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொள்ளலாம் எனகுறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஈரமண்ணில் விளையுது இளமஞ்சள் கிழங்கு!**



"மண்ணு மாதிரி இருக்கியே' என தப்பித் தவறி கூட யாரையும் சொல்லிவிட முடியாது. மண்ணின் அடிமடியில் ரசாயனத்தை

கொட்டினால், சோற்றுக்கு அடிமடியில் கையேந்தி நிற்க வேண்டி வரும் என்கிறார், ஈரோடு சத்தியமங்கலம் தாண்டாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திருமூர்த்தி. அவர் கூறியது:

இந்த விவசாயம் 20 ஆண்டுகளாக எல்லா விஞ்ஞான தகவல்களையும் எனக்கு தருகிறது. நிலத்தின் வயிறு நிம்மதியாக இருப்பதற்காக 2010லிருந்து என்னுடைய 12 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் வாழை, மஞ்சள் சாகுபடி செய்கிறேன். மஞ்சளுக்கு ஜூனில் நடவு செய்து களை எடுக்க வேண்டும். மண் அணைத்து சாணம், புகையிலை தூள் மூலம் படுக்கை தரவேண்டும். பஞ்சகவ்யா, அமிர்தகரைசலை தண்ணீர் மூலமும், இலைவழியாகவும் எட்டுமுறை தெளிக்கிறேன். பவானி ஆற்றுபாசனத்தில் வண்டல் மண்ணாக இருப்பதால், பத்து நாளைக்கு ஒருமுறை தண்ணீர் விடுகிறேன். பத்தாம் மாதம் (பிப்ரவரி) அறுவடை செய்வேன். இலையை அறுத்து வெளியே எடுத்துவிட்டு கிழங்கு தோண்ட வேண்டும். ஒற்றை பயிரில் உள்ள விரலி, குண்டு மஞ்சள் கிழங்கை பிரித்து தண்ணீரில் வேகவைத்து, 10 - 15 நாட்கள் நல்ல வெயிலில் காயவிடவேண்டும். அதன்பின் வேர், மேல்தோல் போகும் அளவுக்கு இயற்கை பாலீஷ் செய்தால் சுத்தமான மஞ்சள் கிடைக்கும். இதை அரைத்தால் இளமஞ்சள் நிறத்தில் இருக்கும். நிறம் கண்ணை உறுத்தாது. அரைத்த மஞ்சளை கிலோ ரூ.120லிருந்து விற்பனை செய்கிறேன். விவசாயிகளுக்கு நோய் தாக்காத இயற்கை விதைக் கிழங்குகளை விற்பனை செய்கிறேன். இவை மிகச்சிறந்த கிருமிநாசினி. உணவில் சேர்த்தால் புற்றுநோய் வராது. பெண்கள் முகத்தில் வளரும் தேவையற்ற முடிகள் உதிர்ந்து விடும். சருமபாதுகாப்பும் தரும். *வஞ்சமில்லா வாழை*:

10 ஏக்கரில் செவ்வாழை, கதலி, ரஸ்தாளி, நேந்திரம், கற்பூரவள்ளி வாழை பயிரிட்டுள்ளேன். இந்தாண்டு முதல் முயற்சியாக 600 நேந்திரம் கன்றுகள் நட்டுள்ளேன். இந்த மண்ணில் விளைச்சல் குறைவுதான். இயற்கையில் விளைந்தது என்ற சந்தோஷம் இருக்கிறது.

அடுத்த சந்ததிகளுக்கு உயிருள்ள மண்ணாக நிலத்தை தருவதில் தான், விவசாயி என்கிற பெருமை இருக்கிறது, என்றார். இவரிடம் பேச: 89034 69996. **எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை.**

**சின்ன சின்ன செய்திகள்**



*புதிய தீவனப்பயிர் இரகங்கள்*: கினியாப்புல் கோ (ஐ.ஜி) 3 - இந்த இரகம் ஆப்ரிக்காவைச் சேர்ந்த மும்பாசா என்ற கினியா புல்லிலிருந்து வளர்ப்புத்தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டது. முந்தய இரகமான கோ.2ஐ விட அதிகமான மற்றும் அகலமான இலைகளைக் கொண்டது. இந்த புல்வகை நிழலைத் தாங்கி நன்கு வளர்வதால் தென்னந்தோப்புக்கு ஊடுபயிரிட ஏற்றது. பசுந்தீவன விளைச்சல் ஆண்டுக்கு (7 அறுவடைகளில்) ஒரு எக்டரில் 320 டன் கொடுக்கவல்லது. முதல் அறுவடை 70 - 75 நாட்களிலும், அடுத்தடுத்த அறுவடைகள் 40-45 நாட்கள் இடைவெளியிலும் செய்யலாம். கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கோ.(பி.எஸ்)5 - இந்த இரகம் தீவனக்கம்பு ஐ.பி.20594 ஐயும், நேப்பியர் புல் எஃடி 437ம் இலைக்கன்று செய்து உருவாக்கப்பட்டது. அதிக பசுந்தீவன விளைச்சலாக ஆண்டுக்கு (7 ஆண்டுகளில்) ஒரு எக்டரில் 360 டன் கொடுக்கவல்லது. அதிக தூர்கள் (30-40 தூர்கள்) குத்து மற்றும் சாயாத தன்மையுடையது. குளிரைத் தாங்கி வளர்வதால் ஆண்டு முழுவதும் சீரான விளைச்சல் தரவல்லது. அகலமான இலைகள் மற்றும் மிருதுவான தண்டுகள் கொண்டது. இதன் உலர்தீவன விளைச்சல் 79.21 டன் / எக்டர் / ஆண்டு. விரைவில் தழைத்து வளரக் கூடியது. முதல்

அறுவடை 75 - 80 நாட்களிலும் அடுத்தடுத்த அறுவடைகள் 40 நாட்கள் இடைவெளியிலும் செய்யலாம். *தீவனச்சோளம் கோ.31:* இப்புதிய இரகம் 2014ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது கோ (எப்.என்) 29ன் கருதி மாற்று தேர்வு. அதிக பசுந்தீவன விளைச்சலாக ஆண்டுக்கு 17 அறுவடைகளில், ஒரு எக்டரில் 190 டன் கொடுக்கவல்லது. அகலமான இலைகளுடன் கூடிய அதிக தூர்கள் இதன் சிறப்பு. விதை உதிராத தன்மையால் கூடுதல் விதை உற்பத்திக்கு (970 கிலோ / எக்டர் / ஆண்டு) வழிகோலுகிறது. அதிக புரதசத்து (9.86%) மற்றும் உலர் எடை விளைச்சல் (49.73 டன் / எக்டர் / ஆண்டு) கொண்டது. குறைந்த அளவு நச்சுப்பொருள் (172 பிபிஎம்), மற்றும் நார்ச்சத்து (19.8%) உடையது. விரைவாக தழைக்கும் திறனால் ஆண்டிற்கு 6-7 அறுவடைகள் செய்யலாம். மிகவும் சுவையானது. கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் விரும்பி உண்ணக்கூடியது. மேலும் **விபரங்களுக்கு தொடர்பு முகவரி :** முனைவர் சா.பாபு, தீவனப்பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 03. தொலைபேசி: 0422 - 661 1228.

*கிட்டி முறையிலான எலி ஒழிப்பு:* இப்பணியில் ஈடுபட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டம், சீரமங்கலம் அறிவொளி நகரைச் சேர்ந்த என்.ரவி கூறும்போது ""அறிவொளி நகரில்'' சுமார் 30 குடும்பத்தினை பாரம்பரியமாக எலி பிடிக்கும் தொழிலை செய்து வருகிறார்கள். ரவியிடம் 400 கிட்டிகள் உள்ளன. தேவையான கிட்டிகளை மூங்கில் குச்சிகளைக் கொண்டு அவர்களே வடிவமைத்துக் கொள்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 300 கிட்டிகள் நட்டார். ஓரளவிற்கு எலிகளை நெற்வயல்களில் ஒழித்து விட முடியும். ஒரு கிட்டிக்கு ரூ.4 என்ற அளவில் விவசாயிகளிடம் வாடகை வசூலிக்கிறார்கள். ஆண்டுக்கு சம்பா மற்றும் கோடை பருவத்தில் மட்டும் வேலை இருக்கும். இவரிடம் உள்ள 400

கிட்டிகளை கொண்டு ஆண்டுக்கு சுமார் 6000 எலிகளைப் பிடிக்கிறார்கள். இதேபோல் அவர்கள் பகுதியிலுள்ள மற்றவர்களிடம் உள்ள 10,000 கிட்டிகள் மூலம் ஆண்டுக்கு சுமார் ஒரு லட்சம் எலிகளைப் பிடித்து அழித்து வருவதாக தெரிவிக்கிறார்.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**எந்த நாற்று உற்பத்திக்கும் குழித்தட்டு தான் சிறந்த முறை**

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற கூற்றுப்படி நாம் உற்பத்தி செய்யும் நாற்றுக்கள் தரமாகவும் வீரியமுடனும், பூச்சி, நோய் தாக்குதல் இன்றி பேண வேண்டும். இதற்கு திறந்த வெளி நாற்று உற்பத்தியை அகலப்பாத்தி அல்லது மேட்டுப்பாத்தி மூலம் விதைத்தவாறு அவ்வாறு நிச்சயம் உற்பத்தி செய்யாது தவிர்த்தல் அவசியம். பலவகை செலவுகளைக் குறைத்து வேர் வளர்க்க நன்கு வளர்ந்த நாற்றுக்கள் மூலம் தான் உயர் மகசூல் கிடைக்கும். எத்தனை திட்டமிட்டு விதைகளை ஊன்றினாலும் நிச்சயம் விதைகள் முளைத்திட ஏற்ற சூழலை இதன் மூலம் ஏற்படுத்த வாய்ப்பு குறைவே. அதாவது ஒரு இடத்தில் 10 விதைகள் விழவும் வாய்ப்புள்ளது. அவை முளைத்து போட்டியா ஆயுள் முடிந்தும் அவஸ்தை நேரும். தனியாக விழுந்த விதைகள் மண்ணில் உள்ள நுண்கிருமிகள் வேர்ப்புழுக்கள், வண்டுகள் மூலம் பாதிக்கப்படுவதுடன் அதிகநீர் தேக்கம், அதிக வெயில் தாக்கம் மற்றும் வேகமாக வீசும் காற்றால் பாதிப்பு என வேறு பல காரணங்களாலும் நமக்கு தரமான நாற்றுக்கள் உரிய தருணத்தில் ஒரே சீராக சம உயரமாக நல்ல தண்டுப்பகுதி, அதிக சல்லி வேர்கள் நோய் தாக்காத இலைகள் கொண்டதாக கிடைக்காது. நிழல்வலைகள் சூரியஒளியின் சூட்டை குறைத்து மட்டுப்படுத்திடும். தரமான நாற்றுக்கள் பெற 50 சதவீத நிழல் தரும் தன்மைக் கொண்ட பச்சை நிற வலைகள் சமவெளிப்பகுதிகளில் உதவுபவை. மலைப்பிரதேசங்களில் 30 சதம் நிழல் தரும் கறுப்பு நிற நிழல்வலை உபயோகிக்க வேண்டும். குழித்தட்டுகள் 0.2, 0.4 0.6 0.8 மற்றும் 1.0 மி.மீ. தடிமன் கொண்டதாக உள்ளன. 1.0 முதல் 1.5 இன்ச்

வரை குழிகள் கொண்டதாக உள்ளன. பொதுவாக காய்கறிப் பயிர்களுக்கு 0.8 மி.மீ தடிமன் கொண்டு 98 குழிகள் கொண்ட குழித்தட்டுகள் உதவும் பாங்கில் உள்ளன. அதிக நீர் வழிந்து செல்ல ஏதுவாக இரண்டு துவாரங்கள் கொண்ட குழித்தட்டு எடையோ குறைவு. மிகவும் எளிதில் ப வடிவில் மடித்து மடக்கு வாகனங்களில் அடுக்கி எடுத்துச் செல்லலாம். நன்கு பதப்படுத்திய தென்னை நார்க்கழிவினை வளர் ஊடகமாகப் பயன்படுத்தலாம். - டாக்டர்**பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குநர்,உடுமலை.**

**நுனி கிள்ளுதல் மூலம்துவரையில் கூடுதல் மகசூல்**

நத்தம், :துவரை சாகுபடியில் நுனியை கிள்ளி விடுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம் என வேளாண்மை துறையினர் யோசனை தெரிவித்தனர். நத்தம், சிறுகுடி, காசம்பட்டி, பட்டணம்பட்டி, மூங்கில்பட்டி, செந்துறை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மானாவரியாக துவரை சாகுபடி செய்துள்ளனர். தற்போது பெரும்பாலான பகுதிகளில் பூவில் இருந்து காய் பிடிக்கும் தருவாயில் உள்ளது. செடியின் நுனியை கிள்ளி விடுவதால் பக்க கிளைகள் வளர்ந்து, அதிக பூக்கள் பூத்து காய் பிடிக்க வாய்ப்புள்ளது. மேலும் மகசூலை அதிகரிக்க இரண்டு சத டி. ஏ. பி., கரைசலை மாலை நேரத்தில் தெளிக்கலாம். அந்தந்த பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் டி. ஏ. பி., உரம் வாங்கி ஏக்கருக்கு 10 கிலோ வீதத்தில் கரைசல் தயாரித்து தெளிக்கலாம். கூட்டுறவு சங்கங்களில் வாங்கப்படும் உரங்களின் பட்டியல் , வங்கி கணக்கு மற்றும் இதர விபரங்களை வேளாண்மை அலுவலகத்தில் சமர்ப்பித்து, 2.5 ஏக்கருக்கு ரூ.650 வீதம் மானியம் பெறலாம். மானியம் அவரவர் வங்கி கணக்கு மூலம் வழங்கப்படும். இதுதொடர்பான விபரங்களுக்கு நத்தம் உதவி இயக்குனர்

அலுவலகத்தை அணுகலாம் என, விவசாய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**முடக்கத்தான் செடிக்கு மவுசு: நாட்டு மருத்துவர்கள் ஆர்வம்**

க.பரமத்தி: க.பரமத்தி பகுதியில், மருத்துவம் குணம் கொண்ட முடக்கத்தான் செடிகள் கிராமப்புற காடுகளில் படர்ந்து காணப்படுவதால், நாட்டு மருத்துவர்கள் அவற்றை சேகரிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மனிதர்களுக்கு, மூட்டுவலி சரி செய்ய மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் பெரும்பாலும் குணமடைவதில்லை. மாத்திரையால் சிலருக்கு ஒத்துக்கொள்ளாமல் பக்க விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. இதற்கு சிறந்த மருந்தாக முடக்கத்தான் செடியின் இலையை பயன்படுத்தினால், மூட்டுவலி, கால்பாத நோய், நரம்பு தளர்ச்சிக்கு மிகவும் பயன்படக்கூடியதாக உள்ளது. அதனால், க.பரமத்தி முதல், வைரமடை வரை சாலையில் இருபுறமும் உள்ள வேலியில் பூத்து குழுங்குகிறது. இதை கிராமப்புற மக்கள் அன்றாடம் பறித்து பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து, க.பரமத்தி அரசு ஆரம்ப பழைய சித்தா டாக்டர் சுரேந்தரன் கூறியதாவது: மருத்துவமனை வசதியில்லாத போது காடுகளில் கிடைக்கும் மணத்தக்காளி, கீழா நெல்லி வேர், சிறியா நங்கை, பெரியா நங்கை, முடக்கத்தான் இலை, ஆடுதொடா இலை போன்றவை, மருந்தாக பயன்படுத்தி வந்தனர். இவற்றை பயன்படுத்த, தற்போது சாலையோரங்களில் வளர்ந்துள்ளதை பறித்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**இயற்கை சாகுபடிவிவசாயத்தை காக்கும்: கேரள கவர்னர் சதாசிவம் பேச்சு**

மூணாறு,:"இயற்கை சாகுபடிக்கு விவசாயிகள் திரும்பினால், நலிவடைந்து வரும் விவசாயத்தை ஓரளவு பாதுகாக்கலாம்,' 'என, கேரள கவர்னர் சதாசிவம் கூறினார்.இடுக்கி மாவட்டம் தொடுபுழாவில் காந்திஜி கல்வி மையம் சார்பில், மாநில அளவில் விளை பொருட்களின் கண்காட்சி 10 நாட்களாக நடந்தது.இதன் நிறைவு விழாவுக்கு, கேரளா நீர் வளத்துறை அமைச்சர் ஜோசப் தலைமை வகித்தார். இடுக்கி எம்.பி., ஜாய்ஸ்ஜார்ஜ், முன்னாள் எம்.பி.,பிரான்சிஸ்ஜார்ஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.கேரள கவர்னர் சதாசிவம் நிறைவு விழாவை தொடங்கி வைத்து பேசியதாவது: உரங்களின் விலை உயர்வாலும், விளை பொருட்களுக்கு தகுந்த விலை கிடைக்காததாலும் விவசாயிகள், விவசாயத்தை தவிர்த்து வருகின்றனர்.இவர்களை மீண்டும் விவசாயத்தில் ஈடுபட செய்ய இயற்கை சாகுபடி மிகவும் உதவும். இச் சாகுபடிக்கு விவசாயிகள் திரும்பினால், நலிவடைந்து வரும் விவசாயத்தை ஓரளவு பாதுகாக்கலாம். விவசாய தொழிலாளர்களின் பற்றாக்குறையை இயந்திரங்கள் மூலம் சரி செய்து கொள்ளலாம். விளை பொருட்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களை மட்டும் இன்றி, விவசாயிகளின் விருப்பத்தையும் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும், என்றார்.

**இறவை பாசனத்தில் வெங்காய சாகுபடி**

ஆண்டிபட்டி,: ஆண்டிபட்டியில் இறவை பாசனத்தில் வெங்காய சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஆண்டிபட்டி இறவை பாசன நிலங்களில் விவசாயிகள் வெங்காயம் நடவு பணிகளை துவக்கி உள்ளனர். ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை பெய்த மழையால் வெங்காய பயிர்களில் அழுகல் ஏற்பட்டு, சாகுபடி செய்த விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். நம்பிக்கை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு

ஏற்பட்டதால் சில்லரைக்கு கிலோ ரூ. 70 முதல் 80 வரை விற்பனையானது. ஆண்டிபட்டி பகுதிகளில் விவசாய நிலங்கள் இருந்தும் உள்ளூர் தேவைக்கு வெங்காயம் வெளியூர்களில் இருந்து வரவழைக்கப்பட்டது. மனம் தளராத விவசாயிகள் இம் முறை மகசூல் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், மீண்டும் வெங்காய நடவுக்கு தயாராகி உள்ளனர். ஆண்டிபட்டி, தெப்பம்பட்டி, சேவாநிலையம், பாலக்கோம்பை, ராயவேலூர், வேலப்பர் கோயில் மலை அடிவாரம், அனுப்பபட்டி, சித்தயகவுண்டன்பட்டி, ஏத்தக்கோயில் உட்பட பல கிராமங்களில் நிலத்தடி நீர் மூலம் இறவை பாசனம் செய்கின்றனர். தற்போது வெங்காயத்திற்கான சில்லரை விலை கிலோ ரூ.20 முதல் 25 வரை விற்கிறது. விவசாயிகள் கூறியதாவது: வெங்காயத்திற்கான விலை போதுமானதாக இல்லை. விதை வெங்காயத்தை கிலோ ரூ.60 வாங்கி நடவு செய்யப்படுகிறது. இனி வரும் தட்ப வெப்பத்தால் மகசூல் அதிகம் கிடைக்கும் என்று நம்புகிறோம்., என்றனர்.

**விவசாயிகள் கூட்டம்**

ராமநாதபுரம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க ராமநாதபுரம் மாவட்ட குழு கூட்டம் நடந்தது. தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். செயலர் முத்துராமு, நிர்வாகிகள் ஜெயராஜ், நாகநாதன், எஸ்.முருகேசன் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். சமீபத்தில் கனமழை பெய்தும் தூர்வாரப் படாததால் கண்மாய்களில் தண்ணீர் தேங்கவில்லை. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கண்மாய், வரத்துவாரிகளை தூர் வார மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். விருதுநகர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு கமுதி தாலுகா கே.எம்.கோட்டை கிராமத்தில் புகுந்தது. இதனால் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்த உளுந்து பயிர் அழுகியது. பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மல்லி விளைச்சல் அமோகம்**

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மல்லி செடிகள் விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆர்.எஸ்.மங்கலம், வெட்டுக்குளம், பூலாங்குடி, சீனாங்குடி, விசவனூர், செங்குடி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மல்லி சாகுபடி செய்துள்ளனர். ஈரப்பதத்துடன் மல்லிச் செடிகளுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை நிலவுவதால் நோய், பூச்சி தாக்குதல் இன்றி செழிப்பாக வளர்கிறது. மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மார்க்கெட்டில் மல்லி வரத்து அதிகரித்தால் விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**பட்டு வளர்ச்சி ஆய்வாளர் பணிக்கு அழைப்பு**

ராமநாதபுரம்: சேலம் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் அறிவிப்புபடி உதவி பட்டு வளர்ச்சி ஆய்வாளர் பணிக்கு மாநில பதிவு அடிப்படையில் தகுதியுடையோரின் பதிவு மூப்பு ராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது வேதியியலை முதன்மை பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்று பதிந்திருக்க வேண்டும். பட்டுப்புழு வளர்ப்பில் 6 மாத முன் அனுபவ சான்று அல்லது ஓசூர் பட்டு வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் 6 மாத பயிற்சி சான்று அல்லது தமிழ்நாடு வேளாண் பல்கலை.,யில் பட்டு வளர்ச்சி முதுநிலை டிப்ளமோ சான்று பெற்று பதிந்திருக்க வேண்டும். 2015 ஜூலை 1 அன்று 18 முதல் 57 வயது வரையுள்ள அனைத்து பிரிவினர், 18 முதல் 30 வயது வரையுள்ள பொதுப்பிரிவினர் பரிந்துரைக்கப் படுகின்றனர். தகுதியுடையோர் வேலைவாய்ப்பு பதிவு அட்டை மற்றும் தங்களது அனைத்து அசல் சான்றுகளுடன் மாவட்ட

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மூப்பு சரி பார்த்து கொள்ளலாம் எனகலெக்டர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோழி தீவன அரவை இயந்திரம் கொள்முதல் செய்ய விண்ணப்பிக்கலாம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் கஜலட்சுமி வெளியிட்டுள்ள அறிக்கை:காஞ்சிபுரம் மாவட்டத்தில் காட்டுப்பாக்கம் கோழி பண்ணையில் மத்திய அரசின் உதவியுடன் கூடிய வான்கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் அரவை இயந்திரம் (அரை டன் கொள்ளளவு) மற்றும் உபகரணங்கள் கொள் முதல் செய்யப்படவுள்ளது. தீவன அரவை இயந்திரத்திற்கான தொழிற்நுட்ப விபரங்களை காட்டுப்பாக்கம் கோழி பண்ணை கண்காணிப்பாளரிடம் பெற்று விருப்பமுள்ள இயந்திர விற்பனையாளர்கள் தங்களது போட்டி விலைப்பட்டியலை வரும் 13ம் தேதி மாலை 5 மணிக்குள் காட்டுப்பாக்கம் கோழி பண்ணை நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இந்த அரவை இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்முதலில் அமைக்கப்பட்டுள்ள கொள்முதல் குழு தீர்வே இறுதியாகும் என்று தெரிவித்துள்ளார்.

**வேலூரில் தக்காளி கிடு கிடு உயர்வு பொதுமக்கள் அதிர்ச்சி**

வேலூர், : வேலூரில் தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து, ஒரு கிலோ ரூ.50 க்கு விற்றதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். வேலூர் மார்க்கெட்டிற்கு தினமும் லாரிகள், வேன்கள் மூலம் தக்காளி, கத்திரிக்காய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கேரட் போன்ற காய்கறிகள் வருகின்றன. மேலும் வேலூர் மாவட்டத்தில் விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட காய்கறிகள், தானியங்களை மார்க்கெட்டிற்கு

கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இங்கிருந்து பல்வேறு ஊர்களுக்கும் காய்கறிகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்நிலையில் ஆந்திராவில் இருந்து தினந்தோறும் விற்பனைக்காக 60 லோடு முதல் 70 லோடு வரை லாரிகள், வேன்கள் மூலம் வேலூர் மார்க்கெட்டிற்கு தக்காளி வந்து கொண்டு இருந்தது. தற்போது பனிக்காலம் தொடங்கி இருப்பதால் தக்காளி பூக்கள் கருகியுள்ளன. இதனால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக □30, 25க்கும் விற்பனை செய்து வந்த தக்காளி நேற்று ஒரேநாளில் □50 வரை உயர்ந்துள்ளது. மேலும் 30 லோடுகள் மட்டுமே தக்காளி வரத்து உள்ளது. இந்த திடீர் விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இன்னும் சில நாட்கள் இந்த விலை உயர்வு நீடிக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**அழிந்து வரும் மிளகாய் விவசாயம்**

பண்ருட்டி, :பண்ருட்டி அருகே கரும்பூர், வாணியம்பாளையம், திருத்துறையூர் ஆகிய கிராமங்களில் பச்சைமிளகாய் விவசாயம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு 50 ஏக்கருக்கு மேற்பட்ட அளவில் நடந்து வந்தது. காலப்போக்கில் வேளாண்மைத்துறை சார்பில் போதிய அளவில் ஆக்கமும், ஊக்கமும் அளிக்காததால் குறைந்த அளவே விவசாயம் நடைபெற்று வருகிறது. 6 மாத பயிரான இவற்றை விவசாயிகள் தினந்தோறும் பறித்து பண்ருட்டி காய்கறி மார்க்கெட்டில் விற்பனை செய்வது வழக்கம். தற்போது இதுபோன்ற விவசாயத்தை செய்வதற்கு விவசாயிகள் முன்வருவதில்லை. காலப்போக்கில் மிளகாய் விவசாயம் அழிந்து வரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அழிந்துவரும் மிளகாய் விவசாயத்தை காப்பாற்ற வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கொய்யா பழங்களை விற்பனை செய்ய புதிய கிடங்கு அமைக்க வேண்டும்**

பண்ருட்டி, : பண்ருட்டி அருகே ஒறையூர், பனப்பாக்கம், நல்லூர்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கொய்யாபழம் விவசாயம் நடந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுக்கு முன்பு நெல், கரும்பு போன்ற பயிர்களையே அதிகளவு விவசாயிகள் விவசாயம் செய்து வந்தனர். காலப்போக்கில் செலவினங்கள் அதிகமானதால் மாற்று பயிர் விவசாயம் செய்ய முன்வந்தனர். இதில் கொய்யா விவசாயம் குறைந்த செலவில் அதிகளவு லாபம் கிடைத்ததையொட்டி அதிகளவு பயிர் செய்யப்படுகிறது. இங்கு விளையும் கொய்யா ஆந்திரா, பெங்களூர், சென்னை, கேரளா ஆகிய மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் நேரிடையாக வந்து வாங்கி செல்கின்றனர். உடலுக்கு தேவையான ஊட்டச்சத்து அளிப்பதால் மருத்துவர்களே இந்த கொய்யா பழங்களை சாப்பிட அறிவுறுத்துகின்றனர். இயற்கை சத்தான கொய்யாபழம் நோய் எதிர்ப்பு சக்திகளை மனிதனின் உடலில் உருவாக்குகிறது என மருத்துவர்கள் கூறுகின்றனர். தினந்தோறும் மினி லாரிகளில் பல ஆயிரம் கிலோ விற்பனையாகிறது. எனவே கொய்யாப்பழம் கிடங்கு ஒன்று புதிதாக அமைத்தால் அனைத்து விவசாயிகளும் ஒரே இடத்தில் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ரூ.35 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்**

அனுப்பர்பாளையம்,: அவிநாசி சேவூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.35 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், நிலக்கடலை வரத்து அதிகரித்தது. மொத்தம் 1972 நிலக்கடலை மூட்டைகள் ஏலத்துக்கு வந்திருந்தன. ஏலத்தில் குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை

ரூ.4570 முதல் ரூ. 5130 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 4220 முதல் ரூ. 4480 வரையிலும், மூன்றாவது ரகம் நிலக்கடலை ரூ. 3440 முதல் ரூ. 3800 வரையிலும், ஏலம் போனது. மொத்தம் ரூ.35 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நேற்று நடைபெற்றது. தண்டுக்காரன்பாளையம், சூரிபாளையம், போத்தம்பாளையம், தத்தனூர், ராமியம்பாளையம், மங்கரசவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து 396 விவசாயிகளும், மணப்பாறை, ஈரோடு, திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் இருந்து 11 நிலக்கடலை வியாபாரிகளும், ஏலத்தில் பங்கேற்றனர். இந்த தகவலை சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளார் சரவணன் தெரிவித்துள்ளார்.

**க.பரமத்தி ஒன்றிய பகுதியில் மஞ்சள் விளைச்சல் அமோகம்**

க.பரமத்தி, : க.பரமத்தி ஒன்றிய பகுதியில் தைப்பொங்கலுக்காக சாகுபடி செய்த மஞ்சள் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதற்கு உரிய விலை கிடைக்குமா என்ற ஏக்கத்தில் விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். க.பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னதாராபுரம், அஞ்சூர், கார்வழி, மொஞ்சனூர்;, விஸ்வநாதபுரி, கோடந்தூர்;, உள்ளிட்ட ஊராட்சிகளில் மஞ்சள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. கிணற்று பாசன த்தை நம்பி ஒன்றிய பகு தியில் சுமார் 200 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது மஞ்சள் விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சித்திரையில் நடவு செய்யப்படும் இந்த மஞ்சள் பொங்கலுக்கு முன்னதாக அறுவடை செய்யப்படும். இதில் சிறிய அளவிலான மஞ்சள் தோகையுடன் பறிக்கப்பட்டு பொங்கல் பண்டிகைக்கு விற்பனை செய்யப்படும். மற்ற பெரும்பாலான மஞ்சள் வெட்டியெடுத்து பதப்படுத்தப்பட்டு சந்தைகளுக்கு கொண்டு செல்லப்படும். இந்த வகையில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் நோய் தாக்குதல் இல்லாமல் செழித்து வளர்ந்து தற்போது அறுவடைக்கு

தயாராக உள்ளது. இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், மாநிலம் முழுவதும் பருவமழை பொய்த்ததால் கிணற்று பாசனம், ஆறு, வாய்க்கால் பாசனத்தை நம்பி இப்பகுதியில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர். குறைந்தளவு நீரிலும் மஞ்சள் விளைச்சல் அமோகமாக இருக்கும் என்பதால் இப்பகுதி விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டுள்ளனர். இந்த மஞ்சள் தற்போது நல்லமுறையில் விளைந்துள்ளது. தை மாத பொங்கலுக்காக வரும் வாரத்தில் இது அறுவடைக்கு தயாராகி விடும். கடந்தாண்டு மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காமல் போனதால் விவசாயிகள் நஷ்டமடைந்தனர். இதனால் பலர் மாற்று பயிர்களுக்கு மாறி விட்டனர். எனவே இந்தாண்டு மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.உரிய விலை கிடைக்குமா?

**கரூர் மாவட்டத்தில் வரத்து அதிகம் ஆரஞ்சு பழம் விலை வீழ்ச்சி**

கரூர், . வரத்து அதிகம் காரணமாக ஆரஞ்சுபழம் விலை வீழ்ச்சியடைந்துள்ளது கரூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் வேளாண் தொழில் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தது. கடந்த ஆண்டு ஓரளவு மழை பெய்தது. பரவலாக அனைத்து பகுதியிலும் மழை பெய்ததால் விளைச்சல் அதிகமாக இருந்தது. பழங்களை பொறுத்தளவில் வாழையை தவிர மற்ற பழங்கள் பிற மாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. வரத்து அதிகமாக உள்ளதால் பழங்களின் விலையும் குறைந்து வருகிறது. ஆரஞ்சுப்பழம் கிலோ ரூ.60ஆக இருந்தது தற்போது ரூ.30ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆப்பிள் ரூ.200ல் இருந்து ரூ.100ஆகவும், மாதுளை ரூ.150ல் இருந்து ரூ.100ஆகவும் விலை குறைந்திருக்கிறது. சாத்துக்குடி ரூ.50. திராட்சை ரூ.60, கொய்யா ரூ.70, க்கும் விற்பனை செய்யப்படுகிறது. எலுமிச்சை ஒன்று ரூ.5க்கு விற்பனையாகிறது. பழம் விலை குறைந்ததையடுத்து பழச்சாறுகளின் விலையும் முன்பு இருந்ததைவிட ரூ.20 வரை விலைகுறைத்து விற்பனையாகிறது.

**வேளாண் உதவி இயக்குனர் ஆலோசனை**

**சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளதாவது: தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில் அதிக மகசூல்பெற ஜிப்சம் இடுவது அவசியம். ஒரு எக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இடுவது மிகவும் அவசியம். ஜிப்சம் இடும்போது 200 கிலோவை அடி உரமாகவும், மீதமுள்ள 200 கிலோவை 40 - 45 வது நாளில் பூக்கும் தருணத்தில் இட்டு களைகொத்தி பயிரைச்சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடி உரமாக இடுவதால் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற நோய்களை வெகுவாக குறைக்க முடியும். பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும் ஜிப்ஸம் இட்டு களை கொத்தி மண் அணைப்பதால் கால்சியம் மற்றும் கந்தக சத்து குறைபாடுள்ள நிலங்களில் நல்ல பலன் கிடைக்கும். ஜிப்சம் இடுவதால் நன்கு விழுதுகள் இறங்கி பொக்கற்ற நல்ல எடையுடன் கூடிய திரட்சியான நிலக்கடை பருப்புகள் கிடைக்கும். அதிக மகசூலும் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.**

**வேளாண் துறை தகவல் நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது எப்படி?**

கறம்பக்குடி, : நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது எப்படி? என்பது குறித்து வேளாண் துறை சார்பில் கறம்பக்குடி வட்டார விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் மூலம் கறம்பக்குடி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி நடத்த திட்டமிடப்பட்டது. இதன்படி, கறம்பக்குடி அடுத்த வாண்டான்விடுதி ஊராட்சி, பேயாடிப்பட்டி கிராமத்தில்

இதற்கான சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமுக்கு கறம்பக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் தலைமை வகித்தார். மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டமான வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் விதைப்பு முதல் அறுவடை வரையில் உள்ள நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வயல்களில் விளக்கி பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் அட்மா திட்டம், பண்ணை பள்ளியின் நோக்கம் குறித்து விளக்கிக் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நெல் சாகுபடியில் பருவத்துக்கு ஏற்ற ரகங்கள், விதை நேர்த்தி ஆகியன குறித்து அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியகுமார் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பரிமளவாசகம், சங்கீதா ஆகியோர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். அட்மா திட்ட வழிகாட்டுதல்படி தொடர்ந்து நெற்பயிரில் அதிக மகசூல் பெற பல்வேறு தொழில்நுட்பங்கள் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு சாதனை படைக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது குறித்து வேளாண் அலுவலர்கள் எடுத்துரைத்தனர்.

## முன்னாள் அமைச்சர் வேண்டுகோள் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வது எப்படி?

பொன்னமராவதி, : இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வது எப்படி? என்பது குறித்து பொன்னமராவதி வட்டார விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் செயல் விளக்கம் அளித்தனர்.புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அடுத்த நகரப்பட்டியில் அட்மா திட்டம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைப் பள்ளியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு இயந்திர நடவு குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் அட்மா திட்ட நிதி உதவியுடன் பொன்னமராவதி வட்டாரம், கண்டியாநத்தம் கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி டிசம்பர் மாதம் முதல் ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த வாரம் பண்ணைப் பள்ளியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயந்திரம்

மூலம் நடவு செய்வதன் பயன்பாடுகள் குறித்த செயல் விளக்க முகாம் நகரப்பட்டி கிராமத்தில் விவசாயி செல்வராஜ் என்பவரது வயலில் நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்த வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன், செயல் விளக்கம் அளித்ததோடு இயந்திரம் மூலம் நடவு செய்வதால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

பாய் நாற்றங்கால் அமைக்கும் முறை குறித்து வேளாண் உதவி அலுவலர் குமாரசாமியும், பவர் கோனோவீடர் மூலம் களை எடுப்பது குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி ஆகியோரும் பயிற்சியளித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர் அருளானந்தம், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ப்ரியங்கா மற்றும் ராஜீ ஆகியோர் செய்திருந்தனர்.

**நிலக்கடலைக்கு ஜிப்சம் உரம் அவசியம் வேளாண் உதவி இயக்குனர் ஆலோசனை**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளதாவது: தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில் அதிக மகசூல்பெற ஜிப்சம் இடுவது அவசியம். ஒரு எக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இடுவது மிகவும் அவசியம். ஜிப்சம் இடும்போது 200 கிலோவை அடி உரமாகவும், மீதமுள்ள 200 கிலோவை 40 - 45 வது நாளில் பூக்கும் தருணத்தில் இட்டு களைகொத்தி பயிரைச்சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடி உரமாக இடுவதால் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற நோய்களை வெகுவாக குறைக்க முடியும். பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும் ஜிப்ஸம் இட்டு களை கொத்தி மண் அணைப்பதால் கால்சியம் மற்றும் கந்தக சத்து குறைபாடுள்ள நிலங்களில் நல்ல பலன் கிடைக்கும். ஜிப்சம் இடுவதால் நன்கு விழுதுகள் இறங்கி பொக்கற்ற நல்ல எடையுடன் கூடிய

திரட்சியான நிலக்கடை பருப்புகள் கிடைக்கும். அதிக மகசூலும் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**திசு வாழைக்கன்று வழங்கல்**

பாபநாசம், : பாபநாசம் அடுத்த ரெகுநாதபுரம் ஊராட்சியில் அம்மா நாற்றுப் பண்ணை இயங்கி வருகிறது. இப் பண்ணையில் திசு வாழை, மா, கொய்யா உள்ளிட்ட பழச் செடிகள் வளர்க்கப்பட்டு வருகிறது. பொங்கலை முன்னிட்டு விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு திசு கன்று வாழை வழங்கப் பட்டது. ஒருவருக்கு 10 வீதம் 200 பேருக்கு திசு வாழைக் கன்றுகளை ஊராட்சி தலைவர் ஜெய் சங்கர் வழங்கினார். நிகழ்ச்சியில் ஊராட்சி துணைத் தலைவர் வெங்கடேசன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**சீர்காழியில் ஒரு லட்சம் மரக்கன்று நடும் பணி துவக்கம்**

சீர்காழி, : சீர்காழி இமய வரம்பன் கார்டனில் தமிழ்நாடு புதுச்சேரி அனைத்து கட்டிட பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு பசுமை புரட்சிக்குழு சீர்காழி கட்டிட பொறியாளர்கள் சங்கம் தமிழ்நாடு பசுமை உலகம் சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணிக்கான துவக்க விழா நடந்தது. பசுமை புரட்சிக்குழு மாநில தலைவர் பொறியாளர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். பொறியாளர்கள் மார்கோணி சந்தானம், ரவிச்சந்திரன், சண்முகநாதன், ராஜேஷ் முன்னிலை வகித்தனர். சீர்காழி கட்டிட பொறியாளர் சங்க தலைவர் திருநாவுக்கரசு வரவேற்றார் தமிழ்நாடு புதுச்சேரி அனைத்து கட்டிட பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு மாநில தலைவர் சிவலிங்கம், மரக்கன்றுகள் நடும் பணியை துவக்கி வைத்து பேசுகையில், சீர்காழியில் பகுதிகளில் பசுமை புரட்சிக்குழு சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டு அதற்கான பணியில் முதற்கட்டமாக ஆயிரம் மரக்கன்றுகள், இமயவரம்பன் கார்டனில் நடும் பணி துவங்கியுள்ளது. மரக்கன்றுகளை பாதுகாக்கும் வகையில் கூண்டுகள்

வைக்கப்பட்டுள்ளது. மரக்கன்றுகளுக்கு தண்ணீர் விட்டு பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். இதில் விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் தாளாளர் ராதாகிருஷ்ணன், மாநில செயலாளர் ராகவன், மாநில பொருளாளர் ரமேஷ்குமார், மண்டல தலைவர் நௌசாத், கரும்பு விவசாய சங்க தலைவர் இமயவரம்பன், மாநில நிர்வாக அலுவலர் சண்முகன், மண்டல செயலாளர் கார்த்திகேயன், மாநில துணை தலைவர் தில்லைராஜன், நகர கூட்டுறவு வங்கி தலைவர் பக்கிரிசாமி, மதிமுக நகர செயலாளர் பாண்டியன், வழக்கறிஞர் நெடுஞ்செழியன், கவுன்சிலர் கண்ணதாசன் கலந்து கொண்டனர். செயலாளர் நடராஜன் நன்றி கூறினார்.

## நெல் பயிரில் குலைநோய் தாக்குதலை தடுப்பது எப்படி?

சிவகாசி, : நெற் பயிரில் வேகமாகப் பரவி வரும் குலைநோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த, ட்ரை சைக்ளோசோல் மருந்து தெளிக்க வேண்டும் என வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கி உள்ளார்.இது குறித்து சிவகாசி வேளாண் உதவி இயக்குநர் பத்மாவதி அறிக்கை.சிவகாசி வட்டாரத்தில் நடவு செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் குலைநோய் தாக்குதல் பரவலாக அதிகரித்து வருகிறது. இந்நோய் தாக்கிய பயிர்களின் இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற மையப் பகுதியுடன் காய்ந்து ஓரங்களுடன் கூடிய கண்வடிவ புள்ளிகள் காணப்படும். இது போன்று பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுகளை உருவாக்கும். இந்நோய் தீவிர தாக்குதலின்போது பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். கதிர் வெளிவந்தவுடன் சாய்ந்து விடும். நெற் பயிரின் கழுத்துப் பகுதியில் சாம்பல் நிறம் மற்றும் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் தோன்றி பின்னர் கருப்பு நிறமாக மாறி உடைந்து விடும். இதுபோன்று நெல் பயிரில் குலைநோய் தோன்றும்போது ஏக்கருக்கு ட்ரைக்ளோசோல் 200 கிராம் தெளிக்க வேண்டும். நடவு செய்த 45 நாட்களுக்குப் பின் 10 நாட்கள்

இடைவெளியில் சுடோனோஸ் புளோரோசன்ஸை 0.5% என்ற அளவில் மூன்று முறை தெளித்து இந்நோய் பரவாமல் கட்டுப்படுத்தலாம். இதேபோன்று சிவகாசி தாலுகாவில் விவசாயிகள் பருத்தி சாகுபடி அதிகளவில் செய்கின்றனர். இந்தப் பயிருக்கான எஸ்விபிஆர்-2 விதைகள், மற்றும் பருத்தி நுண்ணுரம் தேவையான அளவு வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளது. விவசாயிகள் இதை மானியத்தில் வாங்கிப் பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பனிக்காலத்தில் பட்டுப்புழுவை தாக்கும் நோயை கட்டுப்படுத்துவது எப்படி? அதிகாரி விளக்கம்**



பொள்ளாச்சி,

பனிக்காலத்தில் பட்டுப்புழுவை தாக்கும் நோயை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து பொள்ளாச்சி தொழில்நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் அழகு ராமலிங்கம் விளக்கம் அளித்தார்.

<u>பட்டின் தேவை அதிகரிப்பு</u>

உலக அளவில் பட்டு உற்பத்தியில் சீனா முதலிடம் வகிக்கிறது. இந்தியா 2–வது இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் ஆண்டிற்கு 30 ஆயிரம் மெட்ரிக் டன் பட்டு தேவைப்படுகிறது. ஆனால் தற்போது 18 ஆயிரம் மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. இலக்கை எட்ட கூடுதல் பட்டு தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் வெண்பட்டு உற்பத்தியில் உடுமலை, பொள்ளாச்சி பகுதிகள் முதலிடம் வகிக்கின்றன. இந்த பகுதியில் ஆண்டு முழுவதும் வெண்பட்டுக்கூடு தயாராகி வருவது குறிப்பிடத்தக்கது.

<u>விவசாயிகள்</u>

கோவை மாவட்டத்தில் 1,475 ஏக்கரில் 811 விவசாயிகள் மல்பெரி சாகுபடி செய்து பட்டுக்கூடு தயாரித்து வருகின்றனர். இதுதவிர உடுமலை உதவி இயக்குனர் கட்டுப்பாட்டில் உள்ள பொள்ளாச்சி தொழில்நுட்ப சேவை மையம் கட்டுப்பாட்டில் அதாவது பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தாலுகாவில் 1,469.75 ஏக்கரில் 719 விவசாயிகள் மல்பெரி பயிரிட்டு உள்ளனர்.

பட்டு வளர்ப்பு தொழில் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட ஒரு தொழிலாகும். பட்டுப்புழு வளர்ப்பு தொழில் மல்பெரி செடியில் பயிர் செய்து பராமரித்தல், பட்டுப்புழு வளர்ப்பு ஆகிய 2 செயல்பாடுகளை கொண்டது. புதிதாக மல்பெரி நடவு செய்து பட்டுப்புழு வளர்ப்பு செய்யும் விவசாயிகளுக்கு, புதிதாக பட்டு நூற்பு ஆலை அமைப்பாளர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை பட்டு வளர்ச்சி துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

<u>நோய் தாக்குதல்</u>

பனிக்காலத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் சுண்ணாம்பு கட்டி நோய், மல்பெரி செடியில் இலைக்குருத்து நோய் தாக்குதல் ஏற்படுகின்றன. இவைகளை கட்டுப்படுத்த பட்டு வளர்ச்சித்துறை பொள்ளாச்சி தொழில்நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் அழகு ராமலிங்கம் கூறியதாவது:–

பட்டுப்புழு வளர்ப்பிற்கு காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 75 சதவீதம் இருக்க வேண்டும். தற்போது பனிக்காலம் காரணமாக ஈரப்பதம் 110 சதவீதமாக அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக பூஞ்சானம் மூலம் சுண்ணாம்பு கட்டி நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் ஏற்பட்ட பட்டுப்புழு கட்டியாக மாறி இறக்க நேரிடும். இதனால் பட்டுக்கூடு மகசூலில் 5–ல் இருந்து 10 சதவீதம் இழப்பு ஏற்படும். இதை சரிசெய்ய புழு படுக்கையை அதிகப்படுத்தி இடவசதியை ஏற்படுத்த வேண்டும். இதை கடைப்பிடிக்கும் போது பூஞ்சானம் புழுக்களுக்கு பரவாது.

<u>90 சதவீத மகசூல்</u>

பனிக்காலம் முடிய உள்ள காலங்களில் தினசரி காலை வேளையில் சுண்ணாம்பு தூள் தூவ வேண்டும். பட்டுப்புழு 3–வது தோலுரிப்பிற்கு பிறகு 2–வது நாளிலும், 4–வது தோலுரிப்பு முடிந்து, 2–வது மற்றும் 4–வது நாளில் அங்குஷ்சப்ளிமென்ட் மருந்தை காலை வேளையில் தூவ வேண்டும். பனிக்காலங்களில் இந்த முறைகளை கடைப்பிடித்தால் 90 சதவீத மகசூல் எடுக்கலாம். மல்பெரியில் இலை குருத்து புழு தாக்குதல் அதிகமாக தென்பட்டால் மகசூல் பாதிக்கும். இந்தவகை புழு மல்பெரியின் கொழுந்து இலைகளை சாப்பிடுவதால் இலை உற்பத்தி பாதிப்படையும். தொடர்ந்து முட்டையிட்டு இனவிருத்தியை பெருக்கி கொள்ளும். இதை கட்டுப்படுத்த டிரைகோ கிரம்மா கைலோனிஷ் ஒட்டுண்ணி அட்டை ஏக்கருக்கு 4 அட்டை வீதம் வாங்கி 32 துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும். இந்த ஒட்டுண்ணி அட்டைகளை மல்பெரி செடியில் கட்டி தொங்க விடவேண்டும்.

<u>இனவிருத்தி</u>

ஒட்டுண்ணி முட்டை பொறித்து கொசு அளவில் வெளியாகி இலைக்குருத்து புழுவின் முட்டைகளை அழித்து அதன் இன விருத்தியை கட்டுப்படுத்தும். மேலும் ப்ராகோன் என்ற குழவியை மல்பெரி தோட்டத்தில் விட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 பாக்கெட் தேவைப்படும். ஒரு பாக்கெட்டில் 100–ல் இருந்து 120 குழவிகள் இருக்கும். இந்த குழவிகளை மல்பெரி தோட்டத்தில் விட வேண்டும்.

மல்பெரியின் இலை குருத்துப்புழுவில் குழவி முட்டையிட்டு பொறித்து, அந்த இனத்தையே அழித்து விடும். ஒட்டுண்ணி மற்றும் குழவி ஆகியவை உடுமலை மத்திய பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மையத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**தோவாளை மார்க்கெட்டில் பிச்சி பூ விலை ரூ.500 உயர்வு ஒரு கிலோ ரூ.1,200–க்கு விற்பனை**



தோவாளை பூ மார்க்கெட்டில் பிச்சி பூ விலை ரூ.500 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.1,200–க்கு விற்பனை

செய்யப்பட்டது.

பூமார்க்கெட்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. அதிகாலையில் இருந்தே பூக்கள் மார்க்கெட்டிற்கு வரத்தொடங்கி விடும். வியாபாரிகளும் வந்து விடுவார்கள். இதனால் அதிகாலையில் இருந்தே விற்பனை நடைபெறும்.

பிச்சிவிலைஉயர்வு

இந்தநிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.700–க்கு விற்பனை செய்யப்பட்ட பிச்சி பூ, நேற்று ரூ.500 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.1,200–க்கு விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் '' பிச்சி பூவின் வரத்து மார்க்கெட்டிற்கு குறைவாக உள்ளது. இதனால் குறைந்த அளவில் இருந்த பூக்களை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் விலை உயர்ந்து காணப்பட்டது'' என்றார். மற்ற பூக்கள் விலை விவரம் மேலும், மல்லிகை ரூ.1,000–க்கும், முல்லை ரூ.800–க்கும், அரளி ரூ.250–க்கும், கனகாம்பரம் ரூ.250–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.220–க்கும், பட்டன்ரோஸ் ரூ.160–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.120–க்கும், சிவந்தி ரூ.100–க்கும், கொழுந்து ரூ.100–க்கும், வாடாமல்லி ரூ.80–க்கும், கோழிப்பூ ரூ.60–க்கும், சம்பங்கி ரூ.60–க்கும், கேந்தி ரூ.50–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.50–க்கும், மாம்பழ கேந்தி ரூ.35–க்கும், துளசி ரூ.15–க்கும், பச்சை ரூ.5–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.300–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.15–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு சூரிய ஒளி மின்சாரத்திற்கு மாறி வரும் நீலகிரி விவசாயிகள்**



ஊட்டி, விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு நீலகிரி மாவட்ட விவசாயிகள் தற்போது சூரிய ஒளி மின்சார பயன்பாட்டிற்கு மாறி வருகின்றனர்.

<u>காய்கறிகள்</u>

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டமாக உள்ளதால் இங்கு கேரட், உருளைக்கிழங்கு, பீன்ஸ், பட்டாணி, கோதுமை உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்கள் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்குள்ள விவசாய நிலங்கள் பள்ளத்தாக்குகள், சரிவான பகுதிகளில் அமைந்துள்ளன.

பள்ளத்தில் உள்ள கிணற்றில் இருந்து டீசல் மோட்டார் மூலம் மேடான பகுதிக்கு தண்ணீர் கொண்டு சென்று விவசாயிகள் பயிர்களுக்கு பாய்ச்சி வருகின்றனர். டீசல் விலை அதிகமாக உள்ளதாலும், வெகு தூரத்தில் இருந்து கிராம பகுதிகளுக்கு டீசல் வாங்கி வர வேண்டிய நிலை இருப்பதாலும் விவசாயிகள் கடும் அவதி அடைந்து வந்தனர்.

<u>சூரிய ஒளி மின்சாரம்</u>

இந்த நிலையில் தற்போது விவசாயிகள் சூரிய ஒளி மின்சாரத்துக்கு மாறி வருகிறார்கள். இதற்காக அவர்கள் விவசாய நிலங்களில் சூரிய ஒளி மின் தகடுகளை அமைத்து, அதில் இருந்து மின்சாரம் பெற்று மோட்டார் பம்புகளை இயக்கி வருகின்றனர். இது குறித்து எம்.பாலாடா பகுதியை சேர்ந்த விவசாயி ஆனந்த் கூறியதாவது:–

காய்கறி செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு டீசல் மோட்டார் பம்புகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலை இருந்தது. ஊட்டியில் இருந்து டீசல் வாங்கி வர வேண்டி உள்ளதால் அதிக செலவு பிடிக்கிறது. இந்த நிலையில் தோட்டக்கலைத்துறை மானியத்தோடு சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கக்கூடிய மோட்டார் பம்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கு விவசாயிகள் இடையே நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் ஊட்டியில் உள்ள காலநிலையிலும் இந்த சூரிய ஒளி மின்சாரம் நன்றாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>மானியம்</u>

இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், சூரியஒளி மின்சார மோட்டார் பம்புகள் அமைக்க 80 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் 13 விவசாயிகளுக்கு ரூ.3 லட்சத்து 80 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது என்று தெரிவித்தனர்.

**பட்டு வளர்ச்சி துறையில் காலியாக உள்ள உதவி ஆய்வாளர் பணியிடங்கள் பதிவு மூப்பின்படி நிரப்பப்படும் வேலைவாய்ப்பு அலுவலர் தகவல்**

திருவண்ணாமலை, பட்டு வளர்ச்சி துறையில் காலியாக உள்ள 41 உதவி ஆய்வாளர் பணியிடங்கள் பதிவு மூப்பு அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதாக, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் தேவரசு விடுத்துள்ள செய்தி க்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>41 உதவி ஆய்வாளர் பணியிடங்கள்</u>

சேலம் பட்டு வளர்ச்சித்துறை இயக்குனர் வெளியிட்டுள்ள 41 உதவி ஆய்வாளர் காலி பணியிடங்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்போர் பதிவு மூப்பு அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இந்த பணிக்கான கல்வித்தகுதி, இளநிலை பட்டப்படிப்பில் தாவரவியல், விலங்கியல் அல்லது வேதியியல் பாடத்துடன் கூடுதலாக பட்டு வளர்ச்சி துறையில் குறைந்த பட்சம் 6 மாத காலம் செய்முறை அனுபவம் இருக்க வேண்டும். மேலும் ஓசூரில் உள்ள பட்டு வளர்ச்சி பள்ளியில் 6 மாத பயிற்சி முடித்த பட்டதாரிகளாக இருக்க வேண்டும். அல்லது கோவையில் உள்ள வேளாண்மை பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டு வளர்ச்சி பட்டய படிப்பு முடித்திருக்க வேண்டும்.

<u>பதிவு மூப்பு அடிப்படையில்...</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவை சேர்ந்தவர்கள் 57 வயதிற்குள்ளாகவும், இதர பிரிவினர் 30 வயதிற்குள் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

மற்கண்ட தகுதியுடைய திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் 6–ந் தேதி (இன்று) மாலைக்குள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.